Registered as a Newspaper பக்கங்கள்: 8 விலை ரூபா 5·00

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | புரட்டாதி 10 | 26-09-94 | திங்கட்கிழமை | ஓசை 220

## அரசாங்கத் தொழில் வாய்ப்புகளில் இன விகிதாசாரம் தொடரும்

அரசாங்க தொழில் வாய்ப்பு வெற்றிடங்களுக்கு ஆட்கள் இனவிகிதாசார அடிப்படையிலேயே தொடர்ந்தும் சேர்க்கப்படுவார்கள் எனப் பொது நிர்வாக பாராளுமன்ற அலுவல் பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் திரு. ரத்னசிறி விக்ரமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஜனாப் ஹமீத் புதனன்று இது குறித்து சபை ஒத்திவைப்பு வேளையில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த அமைச்சர் இதுவரை வழங்கப்பட்டது போன்று 75 வீத நியமனங்கள் பெரும்பான்மையின [6ஆம் பக்கம் பார்க்க]

# தியாகி திலீபன் 7-வது நினைவுநிறைவு நாள் இன்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

### கோட்ட ரீதியாக உண்ணாவிரதம்; நினைவுரைகள்; கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நீராகாரம் எதுவுமின்றி பன்னிரண்டு தினங்கள் உண்ணாநோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த தியாகி லெப். கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நிகழ்வின் இறுதி நாளான இன்று யாழ் குடா நாடெங்கும் திலீபனின் தியாகத்தை நினைவுகொள்ளும் வகையில் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிப்பதற்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இன்று கோட்ட ரீதியாக நடைபெறும் நிகழ்வுகளில் காலை உண்ணாவிரதங்களும், மாலை அதே இடங்களில் வீரவணக்க கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகள் பெரியளவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொது விடுமுறையான இன்று மாணவர்கள், வர்த்தகர்கள், அரச, தனியார் ஊழியர்கள் பொதுமக்கள் என சமூகத்தின் சகல மட்டங்களையும் சேர்ந்தவர்கள் இந்நிகழ்வுகளில் பெருமளவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது

வலிகாமம் / தீவகக் கோட்டங்கள் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலிலும், வடமராட்சிக் கோட்டத்தில் மாலிச்சந்தி பிள்ளையார் கோவில் முன்றலிலும், தென்மராட்சிக் கோட்டத்தில் நுணாவில் மணங்குணப் பிள்ளையார் கோவில் முன்றலிலும் வடமராட்சி கிழக்கில் மாமுனை விளையாட்டுக்கழக (6ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலால் வல்லைப்பாலம் சேதம்

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் வல்லைப் பாலத்தை குறிவைத்து நடாத்திய சரமாரியான எறிகணைத் தாக்குதலினால் அப்பாலம் பலத்த சேதமடைந்துள்ளது.

நேற்றுப் பகல் முழுவதும் நடாத்தப்பட்ட பரவலான தாக்குதல்களின் போது பாலத்தின் ஒரு பகுதி சேதமடைந்ததனால் போக்குவரத்துச் செய்வதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதேவேளை வீதிகளும் பலத்த சேதங்களுக்குள்ளாகி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இப் பகுதியில் நேற்றுக் காலை 6 30 மணி முதல் மூன்று மணித்தியாலங்களாக நடைபெற்ற விமானத் தாக்குதலினாலும் பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறிஷெல் தாக்குதலினாலும் போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டன.

பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட வாகனங்கள் புறாப்பொறுக்கி பகுதியிலும் யாழ். இருந்து பருத்தித்துறை நோக்கி சென்ற வாக [6ஆம் பக்கம் பார்க்க]

# ராணுவத்தின் முயற்சி புலிகளால் முறியடிப்பு; ஆறு மணிநேரம் நடந்த உக்கிர சண்டை

## வளலாய் - கதிரிப்பாய் ஊடாக முன்னேறிய இராணுவம் இழப்புக்களுடன் திரும்பியது

[யாழ்ப்பாணம்]

பலாலி கூட்டுப்படைத்தளத்தில் இருந்து வளலாய் - கதிரிப்பாய் ஊடாக முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தின் [illegible]

## ஓர் இராணுவ அதிகாரி உட்பட மூன்று படையினர் பலி

(கொழும்பு)

பலாலி இராணுவத் தளத்திலிருந்து நேற்று முன்னேறி [illegible] கள் கடும் தாக்குதலை மேற்கொண்டதாகவும் அத் தாக்குதலினால் இராணுவ [illegible] பட்டதாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[யாழ்ப்பாணம்]

பலாலி கூட்டுப்படைத்தளத்தில் இருந்து வளலாய் - கதிரிப்பாய் ஊடாக முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தின் முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது. டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் பலத்த எறிகணை வீச்சு நடத்தியவாறு வெளியேறிய இராணுவத்திற்கு விமானப்படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் உதவியளித்தன. நேற்றுக்காலை ஆரம்பித்த இம்மோதலானது நண்பகல் வரை சுமார் ஆறு மணித்தியாலங்கள் இடம் பெற்றன. இதைத் தொடர்ந்து பலத்த இழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்கிச் சென்றது

நேற்றுக் காலை சுமார் 6-20 மணியளவில் இம்மோதல் ஆரம்பித்தது. பலாலி கூட்டுப்படைத் தளத்தின் கிழக்குப்பகுதியில் இருந்து வளலாய் - கதிரிப்பாய் ஊடாக இராணுவம் அச்சுவேலி நோக்கி முன்னேற முயன்ற போதே இம்மோதல் வெடித்தது.

டாங்கிகள், கவசவாகனங்கள் என்பவற்றுடன் வெளியேறிய பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினருக்கு உதவியாக புக்கார குண்டு வீச்சு விமானம் ஒன்றும் உலங்கு வானூர்தி ஒன்றும் தொடர்ச்சியான தாக்குதலை நடத்தின. இதே சமயம் பலாலி கூட்டுப்படைத் தளத்தில் இருந்து அகோர எறிகணை வீச்சும் நடத்தப்பட்டது

இவ்வாறு சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் முன்னேறிய ராணுவத்திரை எதிர்த்து விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதலை நடத்தினர். இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற கடும் சண்டையானது நண்பகல் 12-00 மணிவரை நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து பலத்த இழப்புக்களுடன் இராணுவம்பின்வாங்கிச் சென்றது

# நான்கு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

வளலாய், கதிரிப்பாய் பகுதிகளூடாக நேற்றைய தினம் முன்னேறிய படையினரை இடைமறித்து விடுதலைப்புலிகள் மேற்கொண்ட உக்கிர தாக்குதலில் நான்கு விடுதலைப்புலிகள் வீரச்சாவடைந்தனர்:

வீரச்சாவடைந்த:

★ 2-ம் லெப்டினன்ட் செல்லக்குட்டி (திருநாவுக்கரசு ரஞ்சன்-கோண்டாவில், யாழ்ப்பாணம்- சொந்த இடம் புளியங் கூடல் ஊர்காவற்றுறை)

★ வீரவேங்கை இலக்கியன் (பிலிப்பையா பாஸ்கரன், அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்சொந்த இடம் பெரிய விளான் பண்டத்தரிப்பு)

★ வீரவேங்கை குபேந்திரன்

[6 ஆம் பக்கம் பார்க்க]



நேற்று சிறிலங்கா படையினரால் அச்சுவேலி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்ட சிறுமி ஒருவரின் சடலத்தை முதலாவது படத்திலும் மேலும் இருவரின் சடலங்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(கொழும்பு)

பலாலி இராணுவத் தளத்திலிருந்து நேற்று முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டதாகவும் அத்தாக்குதலினால் இராணுவ அதிகாரிஒருவர்உட்படமூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தகவலைநேற்றிரவு இந்திய வானொலி வெளியிட்டது.

# எறிகணை, ஹெலி தாக்குதலினால் தந்தை, மகள் உட்பட 6பேர் பலி

## 30க்கு மேற்பட்டோர் காயம்; கட்டடங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

வளலாய் கதிரிப்பாய் பகுதிகளிலிருந்து நேற்றுக் காலை இராணுவத்தினர் முன்னேறி வந்த சமயம் மேற்கொள்ளப்பட்ட எறிகணை மற்றும் உலங்கு வானூர்தியிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் தந்தை, மகள் உட்பட ஆறு பேர் பலியானார்கள் முப்பது பேர் காயமடைந்தனர் மில், கடைகள், வீடுகள், ஆலயங்கள் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட கட்டடங்கள் சேதமடைந்தன.

சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேறி வந்த சமயம் கதிரிப்பாய், வளலாய், அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால், நாவல்காடு, பத்தமேனி பகுதிகளிலேயே இந்தத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கதிரிப்பாய், வளலாய் பகுதிகளிலிருந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் கண்மூடித்தனமாகநடாத்திய எறிகணைத் தாக்குதலிலும், உலங்கு வானூர்தித் தாக்குதலி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தாக்குதலில் பலியானோர் காயமடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவன் கோவிலில் நேற்று தஞ்சமடைந்தவர்களில் இருவர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பலியானார்கள். இத்தாக்குதல் சம்பவத்தில் டன்னிரெண்டுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இறந்தவர்கள் விபரம் வருமாறு; சிதம்பரி கிருஷ்ணன் (68வயது) அச்சுவேலி தெற்கு, இன்னாசி சின்னப்பு (55 வயது) அச்சுவேலி.

காயமடைந்தவர்கள் விபரம்:

(6-ம்பக்கம் பார்க்க)

## பெருமளவு மக்கள் தாக்குதலால் இடம்பெயர்வு

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை அச்சுவேலிப் பகுதியை நோக்கி முன்னேறிய சிறிலங்காப் படையினர் மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களினால் ஆயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்- இவர்கள் இடைக்காடு, பத்

(6-ம்பக்கம் பார்க்க)

# அம்புலன்ஸ்வாகனத்தை ஹெலி துரத்தி சுட்டது

இராணுவ தாக்குதலினால் காயமடைந்தவர்களை ஏற்றி வந்த செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ்வண்டிமீது உலங்கு வானூர்தி தாக்குதல் மேற்கொண்டது. அதன் போது சாரதியின் சாதுரியத்தினால்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**Yogi Home Science Academy**

கேக் ஐசிங், மாச்சீனிமலர்கள் (Sugar Craft) மேலைத்தேய ஐசிங் (Fondant Icing) சமையற்கலை, ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

71 B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட்
நல்லூர் (9499)

**நாளைய சந்ததிக்கான இன்றைய இலக்கியம்**

''ஒரு பிடிமண்'' விற்பனையாகின்றது கே. ஆர். டேவிற் எழுதிய இம்மண்ணின் கதைகள்... மலையிலிருந்து ஒலிக்கும் மணியோசையாய் உங்களை உசுப்பும்... பூபாலசிங்கம், வசந்தம் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம்.
(9471)

**ந. சுந்தரம் பிள்ளையின் 'அக்கரைச்சீமையில்'**

இந்த நாட்டு மக்களின் யதார்த்தமான சுவையான கதை. ஆபாசம் இல்லைகுடும்பத்தினர் அனைவரும் வாசிக்கலாம். ஆசிரியர் எழுதியவை: 250 நாடகங்கள் 47 சிறுகதைகள் பூபாலசிங்கம் புத்தகசாலை. (9434)

**தமிழ்-ஆங்கில நாடகங்கள்**

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் கெட்டிக்காரர்கள், 'முதலாம்பிள்ளை' நூல்களில் உள்ள நாடகங்களை மாணவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடிக்கலாம். உதவிக்கு நாடுங்கள் ந. சுந்தரம்பிள்ளை 30 கடையிற்சுவாமி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம்.
(9435)

**'அப்பியாசக் கொப்பி'**

பாடசாலைச் சீருடைகள், அலுவலக உடைகள் பளிச்சிடும் வெண்மையுடன் ஒளிரச் சலவை நேரத்தைச் சேமிக்க மில்க்வைற் சலவைத்தூள் உதவுகிறது. மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப் பக்கற்றுகள் 25 சேர்ப்பித்து ஒரு அப்பியாசக் கொப்பி பெற்றுக்


# 1992ல் நடந்த தாக்குதலுக்கு இப்போது வழக்கு தாக்கல்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களாக இருந்த லலித் அத்துலத் முதலி, காமினி திசாநாயக்க ஆகியோர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பத்திரிகையாளர்கள் மீது 1992 ஆகஸ்ட் 7-ம் திகதியன்று கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக கூடியது தாக்குதல் நடத்தியது, 1,97,000 ரூபா பெறுமதியான பொருட்களை சூறையாடியது என்பன உட்பட குற்றச்சாட்டுக்கள் ஐந்து சப்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

# வெளிநாட்டு கடிதம் மறைவு ஆய்விலும் புலப்படாதபுதிர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து உறவினர்களால் அனுப்பப்படும் கடிதங்கள் உரிய முகவரியாளர்களுக்கு வந்து சேர்கின்றனவா என்பதை கண்டறிய சோதனை மேற்கொண்ட அஞ்சல் திணைக்கள உயரதிகாரி ஒருவருக்கு வியப்பான அனுபவம் கிடைத்து இருக்கிறது.

பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட சில கடிதங்களும் கூட முகவரியாளரை சென்றடையாமல் மாயமாக மறைந்து போயின.

வெளி நாட்டுக் கடிதங்கள் மாயமாக மறைவதாக பொது மக்கள் தெரிவித்த புகாரை அடுத்து கொழும்பிலுள்ள அஞ்சல் திணைக்கள அதிகாரி ஒருவர் சோதனை ஒன்றை மேற்கொண்டார் இந்த வெளிநாட்டுக் கடிதங்கள் யாரால், எங்கு வைத்து கையாடப்படுகின்றன என்பதைக் கண்டறிவதற்காக விசேட வான் கடிதங்கள் கொழும்பில் அஞ்சல் செய்யப்பட்டன. உடனடியாக வவுனியாவிலுள்ள பிராந்திய அத்தியட்சகருக்கும், முறைப்பாட்டாளர் ஒருவருக்கும் அறிவிக்கப்பட்டு கடிதங்களுக்கு என்ன நேர்கிறது என அவதானிக்கும்படி பணிக்கப்பட்டது ஆனால் குறிப்பிட்ட மூன்று கடிதங்களில் ஒரேயொரு கடிதம் மட்டுமே முகவரியாளரான முறைப்பாட்டாளருக்கு கிடைத்துள்ளது. மீண்டும் பரிசோதனை செய்யப்பட்ட போது இரண்டு கடிதங்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

# பாண் துண்டு சிக்கியதால் இளம் யுவதி மரணம்

பாண் சாப்பிட்டுக்கொண்டிருந்த யுவதி ஒருவர் பாண் துண்டு தொண்டையில் சிக்கியதால் பரிதாபமான முறையில் மரணமானார். இச்சம்பவம் இரத்மலான மாலபேஹென பகுதியில் அண்மையில் இடம்பெற்றது. இருபத்தொரு வயதான நந்தா மாலினி என்னும் இளம் யுவதியே பலியானவர் ஆவார்

மரண விசாரணை நடத்தப்பட்டதைத்தொடர்ந்து பாண் துண்டு தொண்டையில் சிக்கி மரணம் நேரிட்டதாக தீர்ப்பளிக்கப்பட்டது.

# பாடசாலை நேர டியூசன் ஆசிரியர்களுக்கு ஆபத்து

### கல்வி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

பாடசாலை நேரங்களில் டியூசன் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரான தெரிவித்துள்ளார்

பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பாடசாலைநேரங்களில் டியூசன் கொடுப்பதற்காக லீவு போட்டுச் சென்றுவிடுவதாகக்கிடைக்கும் முறைப்பாடுகளைத் தொடர்ந்து அமைச்சர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

### தேசிய விளையாட்டுப் போட்டியில்

# யாழ் மாவட்ட பாடசாலை கலந்துகொள்ளாதது பெருங்குறை

### றிச்சாட்பத்திரான

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றாமல் இருப்பது ஒருபெருங்குறையாகும் இவ்வாறு கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரான தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆறாவது தேசிய பாடசாலைகள் விளையாட்டு விழாவை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்த பின்னர் உரைநிகழ்த்திய கல்வி அமைச்சர் மேலும் கூறுகையில், யாழ் மாவட்டமும் இப் போட்டிகளில் பங்குபற்றினாலன்றி தேசிய பாடசாலைகள்விளையாட்டு விழா ஒரு பூரணவிழாவாக அமைய முடியாது எனவும் குறிப்பிட்டார் அத்துடன் இன்றைய இளைய தலைமுறையை அமைதியின்மை, மன விரக்தி, குரோதம், பொறாமை என்பன ஆட்டிப் படைக்கின்றன. அவர்களைநற் பிரஜைகளாக வழி நடத்துவதற்கு கல்வி மிகவும் அவசியம் எனவும் தெரிவித்தார்.

# விவசாயிகளின் வங்கிக் கடன் மீள அறவிடப்பட மாட்டாது

### அமைச்சர் அறிக்கை

வங்கிகளிடமிருந்து விவசாயக் கடனைப்பெற்று அதைத் திருப்பிச்செலுத்த முடியாதிருக்கும் வறிய விவசாயிகளின் வங்கிக்கடன் தொகை மீள அறவிடப்பட மாட்டாது ஆனால் வங்கிக்கடன் செலுத்தக் கூடியவர்கள் தாம் பெற்ற கடன் தொகையைத்திருப்பி செலுத்த வேண்டும் இவ்வாறு காணி வன வள விவசாய அமைச்சர் டி.எம் ஜயரத்னா கூறியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் அமைச்சர் அதில் மேலும் குறிப்பிடுகையில், இந்நாட்டில் கிராமப் புறங்களில் இருக்கும் வறிய விவசாயிகளின் பிரச்சினைகளில் முக்கியமானதெனக் கருதப்படும் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமை குறித்து ஒரு நியாயமானதீர்வைப்பெற்றுக் கொடுப்பதேபொதுஜனஐக்கிய முன்னணியின் கொள்கையாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

# வாகன இறக்குமதி எதுவும் இப்போதைக்கு வேண்டாம்

### நிதி அமைச்சு பணிப்பு

மேலதிக பணிப்புரை கிடைக்கும் வரை மேற்கொண்டு எந்த வாகனங்களையும் இறக்குமதி செய்ய வேண்டாமென்று பொது ஜன முன்னணி அரசாங்கம் சகல திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள், சபைகள் என்பவற்றிற்கு பணிப்புரை விடுத்துள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சு இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றை சகல இடங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை தற்சமயம் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பயன்படுத்தும் வாகனங்கள் பற்றிய விபரத்தையும் நிதி திட்டமிடல் அமைச்சு கோரியுள்ளது.

# ஐ. தே. கவை ஒழிப்பது பகற்கனவாகவே முடியும்

### -வஜிர அபயவர்த்தனா

(கொழும்பு)

முன்னைய அரசின் குறை குற்றங்களை புதிய அரசாங்கம் இன்னும் தேடிக்கொண்டிருக்கிறது மக்களுக்கு எந்த ஒரு சேவையையும் செய்வதைக் காண முடியவில்லை இவ்வாறு காலி மாவட்ட ஐ-தே-க பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபயவர்த்தனா தெரிவித்தார்

பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் தெரிவிக்கையில், முன்னையஅரசாங்கம் இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தியிருந்த பொருள்களையே புதிய அரசாங்கம் வடக்கிற்கும், தெற்கிற்கும் பகிர்ந்தளித்து வருகிறது

ஐ-தே-கஒழிந்துவிட்டதென தேர்தலின் பின்னர் சுவரொட்டிகள் ஒட்டியிருந்தனர் ஐதேகவை ஒழித்துக் கட்டலாம் என யாரும் நினைத்தால் அது பகற்கனவாகவேமுடியும் எனவும் தெரிவித்தார்

# தொடர் உண்ணாவிரதம்

குருநகர் கிறீன்கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் முதல் நால்வர் தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். ம. நீதன், தே. நிக்சன், து. றொபின்சன், அ. றோகினி ஆகிய நால்வருமே தொடர் உண்ணாவிரதம் இருந்து வருவோராவர்.

# விபத்தில் ஒருவர் பலி

(மன்னார்)

மன்னார் - கற்குவாறியடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லொறி-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த கந்தசாமி பூலோகநாதன் (வயது 38) என்ற குடும்பஸ்தர் பலியானார்.

அடம்பன்தாழ்வு மன்னாரைச்சேர்ந்த இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

# நினைவு கூருகின்றோம்...

**26. 09. 1994**

1987-ம் ஆண்டு இந்தியரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து யாழ்-நல்லூர் ஆலயவீதியில் நீராகாரமும் அருந்தாது உண்ணாவிரதமிருந்து பன்னிரண்டாம் நாளான இதேதினத்தில் வீரச்சாவெய்திய,
யாழ் மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளரான,

**லெப். கேணல் திலீபன்** (இராசையா பார்த்தீபன்-திலீபன் வீதி, ஊரெழு, சுன்னாகம்-யாழ்)

இதேதினத்தில் தேசவிரோதசக்திகள்மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**அமலதாஸ்** (நாகமுத்து மகேஸ்வரன்-செம்மலை, அளம்பில்-மணலாறு)

1988-ம் ஆண்டு மணலாறு-அளம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**வைத்தி** (செந்தில்வேல் தேசிங்கராஜா-வீரமாணிக்கதேவன் துறை, பயிலிட்டி-யாழ்)

கிளிநொச்சி - இராமநாதபுரத்தில் கண்ணிவெடி வைக்கும்போது எதிர்பாராத வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**சிவம்** (வேகாவனம் மாலிகரன்-கொல்லர்புளியங்குளம்-மாங்குளம்)

திருமலை சலப்பையாற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் சுரேந்திரன்** (காளிராசா சிறிபாஸ்கர்-

வைத்தூள் வெற்றுப் பக்கற்றுகள் 25 சேர்ப்பித்து ஒரு அப்பியாசக் கொப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 'மில்க்வைற்'

(சி-10400)

### தவறிவிட்டது

நல்லூருக்கும் புத்தூருக்கும் இடையில் புத்தகப்பை ஒன்று 25-09-94 இல் தவறி விட்டது. வீடியோ சம்பந்தமானவை இதை கண்டு எடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தி. சிவநாதன் திரு வீடியோ விஷன், மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி. (9516)

## கிளிநொச்சி அரச அதிபராக குணராஜா?

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக திரு. குணராஜா அவர்களை நியமிப்பதற்கு அரசு ஆராய்ந்து வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன- எனினும் மேற்படி நியமனம் தொடர்பாக உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை-

## கோழிகளுக்கு தூக்க நோய்

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் கோழிகளிடையே தூக்க நோய் பரவி வருகின்றது. மிக மோசமாகப் பரவியுள்ள இந்நோயினால் கடந்த இரு வாரத்திற்குள் 300க்கு மேற்பட்ட கோழிகள் இறந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. விரைவில் குடியிருப்பில் உள்ள அனைத்துக் கோழிகளுமே இறந்துவிடும் அபாயம் தோன்றியுள்ளதாக குடியிருப்பு நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

# 7ஆம் நாள் நினைவஞ்சலி



லெப். கேணல் நளாயினி



மேஜர் மங்கை

19 09-94 அன்று கற்பிட்டிக் கடற்பரப்பில் கடற்படைக் கப்பலைத் தகர்த்து வீர சாதனை படைத்த கடற் கரும் புலிகளான

**லெப். கேணல் நளாயினி**

**மேஜர் மங்கை**

**கப்டன் லக்ஸ்மன்**

**கப்டன் வாமன்**

ஆகிய கடற் கரும்புலி வீரர்களுக்கு எமது அஞ்சலிகள்



கப்டன் லக்ஸ்மன்



கப்டன் வாமன்

வலிகாமம் கிழக்கு கடற்தொழிலாளர் ஒன்றியத்திற்கு உட்பட்ட

குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கம்

(9515)

திருமலை சலப்பையாற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் சுரேந்திரன்** (காளிராசா சிறிபாஸ்கர்- 3-ம் கட்டை, உப்புவெளி திருமலை)

தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட ஆதரவாளரான,

**செல்லையா யோசப்** (செல்வபுரம்- முல்லைத்தீவு)

1990-ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கேதீஸ்** (பாலகிருஷ்ணன் சந்திரகாந்தன்-வட்டக்கச்சி-கிளிநொச்சி)

யாழ்-கோட்டை சிறிலங்கா இராணுவமுகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். சிசிலியா** (யூடினா பகீரதகுமார்- மருத்துவமனைவீதி-மன்னார்)

**லெப். நகுலன் - நேசன்** (இராசதுரை சிவனேசராசா-வத்திராயன்வடக்கு-தாளையடி)

**ரகு** (இராசசிங்கம் றொபேட் சாந்தகுமார்-கட்டுடை, மானிப்பாய்-யாழ்)

1992-ம் ஆண்டு மட்டு-அம்பிளாந்துறையில் சிறிலங்கா இராணுவத்தினரும், தேசவிரோதிகளும் சேர்ந்து சுற்றிவளைத்து தாக்கியபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சிவா** (நாகமணி சிவசந்திரராஜா-கோட்டைக்கல்லாறு மட்டு)

**கிருபாரதன் - கிருபாகரன்** (கதிர்காமத்தம்பி சந்திரகுமார்-களுவாஞ்சிக்குடி- மட்டு)

இதே சம்பவத்தின் போது சுடப்பட்டு பலியான,

**தயாளன்** ( - - ஆரையம்பதி-மட்டு)

பூநகரி-ஆலடியில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள்மீது நடத்தப்பட்டதாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். முதுவழுதி** (ஆறுமுகம் கோணேஸ்வரன்- கோவில்புளியங்குளம்-வவுனியா)

**லெப்.கலையின்பன்** (தியாகராஜகுருக்கள் இராமையா-தும்பளை-பருத்தித்துறை)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10409)

யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்.



## காபனீரொட்சைட்டை கட்டுப்படுத்த வேண்டுகோள்

கடலில் நீர்மட்டம் அதிகரிப்பதால் நீரில் மூழ்கிப்போகக் கூடிய அபாயத்தை எதிர்நோக்கும் தீவுகள் 2005ஆம் ஆண்டளவில் காபனீரொட்சைட்டின் வெளியேற்றத்தை முன்னேற்றம் அடைந்த கைத்தொழில்மய நாடுகள் கட்டுப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்துள்ளன. ஜெனிவாவில் உள்ள காலநிலை மாநாட்டிற்கு இந்த சிறிய தீவுகளின் கூட்டணி அனுப்பி வைத்துள்ள ஒரு மகஜரில், காபனீரொட்சைட்டின் வெளியேற்றத்தை இந்த தசாப்தத்தின் மத்தியிலிருந்து இருபது சதவிகிதத்தினால் குறைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த வருடத்தில் காலநிலை சம்பந்தமான உச்சி மாநாடு பெர்லினில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இம் மகஜர் முக்கிய விடயமாக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. காபனீரொட்சைட்டின் வெளியேற்றத்தால் உலக அளவில் வெப்பநிலை அதிகரித்துள்ளது. வெப்ப அதிகரிப்பினால் மலை உச்சிகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகுகின்றன. இத்தகைய மேலதிக நீரின் காரணமாக சமுத்திர நீர்மட்டம் உயருகின்றது எனவும் இம் மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## பல்கலை. மாணவர் தெரிவு அடுத்த மாதத்தில் பூர்த்தி

பல்கலைக்கழகங்களுக்கு அடுத்த கல்வியாண்டில் இணைத்துக் கொள்வதற்கான மாணவர்களுக்கான தெரிவு அடுத்த ஆண்டில் பூர்த்தி அடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை ஒன்பது மாகாணங்களிலும் உள்ள இணைப்பு பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு 93/94 கல்வியாண்டிற்கான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இம்முறையும் 2300 மாணவர்கள் 11 இணைப்பு பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு தெரிவாகியுள்ளனர்.

## பதவி வெற்றிடங்கள்

**வணிகர் கழகம் சுன்னாகம்**
**(உடுவில் வட்டப் பிரிவு)**

1. பதவி:- வெளிக்கள உத்தியோகத்தர்கள் (ஆண்கள்) இருவர் (2)
   வயது:- 18 - 30வரை
   தகைமை:- க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களிலும் திறமைச் சித்தி.

2. பதவி:- லிகிதர் (ஆண்) ஒருவர் [1]
   வயது:- 30 - 50 வரை
   தகைமை:- க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி-கணிதம்-ஆங்கிலம்-தட்டெழுத்து ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி

   அல்லது

   அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆகக்குறைந்த 10 வருடங்களுக்கு மேலான லிகிதர் சேவை அனுபவம்.

சுன்னாகம் வணிகர் கழக எல்லைப் பரப்பினுள் (உடுவில் வட்டப்பிரிவு) வசித்து வருபவர்களிட

## விடுதலைப்புலிகள் பற்றி பரிசீலனை செய்யவேண்டும்

**-தி. க. பொதுச்செயலர்**

(சென்னை)

இலங்கையில் புதிய அரசு ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையில் விடுதலைப்புலிகள் பற்றிய கொள்கையை நரசிம்மராவ் அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று திராவிடர் கழக பொதுச்செயலாளர் கி. வீரமணி கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகள் விடயத்தில் மத்திய அரசு ஆக்கபூர்வமான ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறுகையில் தமிழக காவல் துறையினர் விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், விடுதலைப் புலிகள் பற்றிய நிலைப்பாட்டை மறுமலர்ச்சி தி. மு. க வின் வை. கோபாலசாமி தெளிவுபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திலீபன் நினைவாக

### அக்காச்சி குடியிருப்பில் நிகழ்ச்சி

கப்டன் அக்காச்சி நினைவு எழுச்சிக் குடியிருப்பின் மூன்றாவது ஆண்டு நிறைவும் தியாகி லெப். கேணல் திலீபனின் ஏழாவது ஆண்டு நினைவுக் கூட்டமும் இன்று இரவு எட்டு மணியளவில் மேஜர் சுபாஸ் விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது. பொதுக் கூட்டத்தை தொடர்ந்து நடனம், வில்லிசை, நாடகம் மற்றும் எழுச்சிப் பாடல்கள் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியும்

**-காமினி திசாநாயக்கா**

(கொழும்பு)

'கடந்த பொதுத்தேர்தலில் ஐ. தே. கட்சியினர் உற்சாகத்துடன் செயற்படவில்லை அவர்கள் பயந்து விட்டார்கள். ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை இனத்தவர்களையும் இணைத்து, சாதி, மதம் என்பன போன்ற வேறுபாடுகளின்றி ஊக்கத்துடன் உழைத்து வெற்றிகாண வேண்டும்.'

நீர்கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கம்பஹா மாவட்ட ஐ. தே. க. மாநாட்டில் உரையாற்றிய ஐ. தே. க வின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தோல்வி கண்ட ஐ. தே. கட்சி அல்ல இன்று இங்கு நாங்கள் காண்பது. ஜனாதிபதி தேர்தலில் விருப்பு வாக்குக்கு இடமில்லை விருப்பு வாக்கு காமினிக்கும், வெறுப்பு வாக்கு சந்திரிகாவுக்கும் மட்டுமே இருக்கிறது.

பொதுஜன ஐ. மு. கடந்த இரண்டரை ஆண்டுக்கும் மேலாக தேர்தலுக்காக ஆயத்தப்படுத்தியது மூன்றிலிரு பங்கு ஆசனங்களைப் பெற்று எத்தனையோ காரியங்களைச்சாதிக்க கனவு கண்டது. ஆனால் முஸ்லிம் காங்கிரசின் ஆதரவும் இல்லாதிருந்தால் படுதோல்வி எனவும் தெரிவித்தார்.

## போலி ஆவணம் தயாரிப்பு பொலிசாரால் கண்டுபிடிப்பு

கண்டியில் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு மற்றும் விவாகரத்து என்பனவற்றிற்கான போலி ஆவணங்களை தயாரிப்பதில் ஈடுபட்டு வந்த இரகசிய அலுவலகம் ஒன்று பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டது. இங்கிருந்து போலி இறப்பர் முத்திரைகள் உட்பட பல பொருள்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டதுடன் அங்கிருந்தோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஊழியர்களாக பத்து நாட்கள் நடித்த பொலிசார் பல தகவல்களையும் திரட்டிக் கொண்ட பின்னர் இம் முற்றுகையை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய சந்திரன் கண்டுபிடிப்பு

பூமிக்கும் வியாழக் கிரகத்திற்கும் இடையே சஞ்சரித்துக் கொண்டிருந்த ஒரு மைல் அகலமான புதிய சந்திரன் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் இதற்கு டக்டயில் என்று பெயரிட்டுள்ளனர். அமெரிக்காவின் கலிலியோ விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்த சந்திரனைக் கண்டுபிடித்துள்ளனர் இத்தகைய தொரு சந்திரன் கண்டுபிடிக்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்

## புனர்வாழ்வு திட்டம் தயாரிப்பில் அரச சார்பற்ற நிறுவனங்கள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் அத்தியாவசிய சேவைத் திட்டங்கள் குறித்தும் பல்வேறு அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளன-

இம்முயற்சியில் வடக்கில் இயங்கும் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது

வார இறுதியில் வடபகுதிக்கு விஜயம் செய்ய இருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினரிடம் மேற்படி திட்டங்கள் சம்பந்தமான அறிக்கைகள் கையளிக்கப்படவுள்ளன.

மேலும் மேற்படி அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

அத்துடன் இப்பிரதிநிதிகள் குழு சில தினங்கள் தங்கியிருந்து வடபகுதியில் புனர்வாழ்வு நடவடிக்கைகளின் சாத்தியம் குறித்து ஆராய்வார்கள் என்றும் தெரியவருகின்றது.

அதேவேளை இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது அனைத்து நிறுவனங்களுக்குமிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [கோ)

## தோட்ட தொழிலாளருக்கு வீடுகட்ட காணிவழங்கப்படும்

**-அத்தாவுட செனவிரத்தினா**

தோட்டத் தொழிலாளரின் குடியிருப்புகள் 150 வருடங்களுக்கு மேலாக பழமை வாய்ந்தவை. இவை எந்த நேரத்திலும் இடிந்து விழலாம். இந்த நிலைமையைத் தவிர்க்க முன்னோடி நடவடிக்கையாக சகல தொழிலாளர்களுக்கும் தோட்டத்தில் காணி வழங்கி அவர்கள் சொந்த வீடுகளை அமைத்துக்கொள்ள ஒரு புதிய திட்டம் முன்வைக்க வேண்டும்.

இவ்வாறு தோட்டத் தொழிற்துறை பிரதி அமைச்சர் அத்தாவுட செனவிரத்தினா தெரிவித்தார்.

தெரணியகல பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், தோட்டக் காணி பகிர்ந்தளிப்பின் போது தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு வீடு கட்ட காணி வழங்கப்படும். தோட்டத் தொழிலாளர்களின் போக்குவரத்து வசதி தொடர்பாகவும், வெளியிடங்களில் வேலை பார்க்கும் பிள்ளைகள் தமது பெற்றோரை அடிக்கடி சென்றுபார்க்க ஏற்பாடு செய்வது பற்றியும் கவனம் செலுத்தப்படும்.

தற்போது தாய், தகப்பன், வயது வந்த மகன், மகள் மருமகன், மருமகள் எனப்பலரும் ஒரே வீட்டில் இட நெருக்கடியின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையைப் போக்கும் நோக்குடன் புதிய திட்டம் வகுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## செல்டெல் கொண்டுவர சபாநாயகர் தடைவிதிப்பு

பாராளுமன்ற அமர்வின் போது சபைக்குள் செல்டெல் போன்ற தொலைத் தொடர்பு கருவிகளை உறுப்பினர்கள் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சபாநாயகர் கே. பி. இரத்நாயக்கா அறிவித்துள்ளார்.

சபைக்குள் ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் செல்டெல் வைத்திருந்தமை தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும்ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து சபாநாயகர் இவ் உத்தரவைப் பிறப்பித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

## மா விலை குறைப்பையடுத்து விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு

**திலக் கருணாரத்னா**

(கொழும்பு)

உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

வாறு என்பதை அரசாங்கம் தெளிவாகக் கூறவில்லை.

## வடபிராந்திய வணிகர் கழகங்களின் சமாசம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் வணிகர் கழக எல்லைப் பரப்பினுள் (உடுவில் வட்டப்பிரிவு) வசித்து வருபவர்களிடமிருந்து மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் தலைவர் /செயலாளர், வணிகர், கழகம், காங்கேசன் நெடுஞ்சாலை, நவீன சந்தை மேல்மாடி சுன்னாகம் என்ற முகவரிக்கு 5-10-1994 க்கு முன்பாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சு. சோமசுந்தரம்
தலைவர்

கு. சிவகுமார்
செயலாளர்

(சி-10405)

---

(கொழும்பு)

இந்த அரசாங்கம் மாவின் விலையை குறைத்தமையின் காரணமாக அரிசி மற்றும் மரக்கறி வகைகளின் விலைகள் குறைந்து விட்டன. இதனால் எமது நாட்டின் விவசாய பொருளாதாரத்திற்கு பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான திலக்கருணாரத்னா குடாவஸ்கடுவ பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் மாவிலை குறைப்பினால் விவசாயிகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மரக்கறி மற்றும் அரிசி உற்பத்தியாளரின் வாக்குகள் இனிமேல் பொது ஜன முன்னணிக்கு கிடைக்காது.

மா விலை குறைப்பதற்கு தேவையான மானியங்களைப் பெற்றுக் கொண்டது எவ்வாறு என்பதை அரசாங்கம் தெளிவாகக் கூறவில்லை. உணவு அமைச்சில் இருந்த மேலதிக நிதியினால் குறைத்ததாக பிரதமர் கூறுகிறார். அதேவேளை வியாபாரிகளுக்கு செல்லும் லாபத்தை குறைத்ததாக உணவு அமைச்சர் கூறுகிறார். இத்தகைய கூற்றுக்களால் மக்களை இனியும் ஏமாற்ற முடியாது எனவும் தெரிவித்தார்.

---

# முக்கிய அறிவித்தல்

தேசவிடிவுக்காய் தேகத்தை உருக்கி தியாக வேள்விக்கு உலகின் முதல்வனாகிய தியாகி லெப்- கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு (இன்று) இறுதிநிகழ்வுகள் கோட்டரீதியாக இடம் பெறுவதால் அனைத்துத்துறை வர்த்தகப் பெருமக்களும் தங்கள் பிரிவுகளில் பங்குகொண்டு நினைவு கூரும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்-

நன்றி

செயலாளர்

(சி-10412)

---

தியாகி

## லெப். கேணல் திலீபன் 7-ம் ஆண்டு நினைவாக ..



இத்தரை வியக்கும் வண்ணம்
சத்தியப் போர் தொடுத்த
உத்தமன் திலீபன் நினைவில்
நித்தமும் நனைகின்றோம் - இவ்
யுத்தத்தில் வெற்றி பெறும்
சித்தமுடன் உழைக்கின்றோம்.

## விதுரா ஆடையகம்

இல. 34, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி-10408)

---

# மாவின் விலை குறைந்தும் சிற்றுண்டி விலை குறையவில்லை

(யாழ்ப்பாணம்)

மாவின் விலை, முப்பத்தைந்து சதவீதத்தால் குறைந்த போதும், கடைகளில் விற்கப்படும் சிற்றுண்டிகளினதும், உணவுப் பொருள்களினதும் விலைகள் இன்னும் குறைக்கப்படவில்லை என மக்கள் விசனமடைந்துள்ளனர்.

அத்தியாவசியப் பொருள்களுக்கான விலை அதிகரித்த போது நிர்ணயிக்கப்பட்ட உணவுப் பொருள்களின் விலைகள், தற்போதும் அதே விலைகளிலேயே விற்கப்படுவது நியாயமற்ற செயலெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனியின் விலை கிலோ 70 ரூபாவாக இருக்கும் போது பால் தேநீரின் விலை ஐந்து ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இன்று ஐம்பது சதவீதத்திற்கும் மேலாக சீனியின் விலை வீழ்ச்சி அடைந்தும் அதே விலையிலேயே தேநீர் விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

---

# இனப்பிரச்சினை தீர்வு முயற்சிக்கு வரவேற்பு

### தமிழர் மருத்துவ நிறுவனம் தீர்மானம்

(லண்டன்)

போருக்கு முடிவு கட்டி, இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்காக பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவும், தலைவர் பிரபாகரனும் முன்னெடுக்கும் சமாதான முன்முயற்சிகளை இங்கிலாந்தில் இருக்கும் தமிழர் மருத்துவ நிறுவனம் வரவேற்று பாராட்டியிருக்கின்றது.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து பரிகாரம் காண்பதற்காக லண்டன் பல்கலைக்கழகம் இருநாள் கருத்தரங்கு ஒன்றை நடாத்தியது தெரிந்ததே.

இக் கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வைக் காண்பதற்காக இரு தலைவர்களும் பாடுபட வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கருத்தரங்கின் ஆரம்பத்தில் உரையாற்றிய லண்டன் மேயர் இலங்கை போன்ற சின்னஞ்சிறிய நாட்டில் இனங்களுக்கிடையே அமைதியை நிலைநாட்ட முடியும். இதற்கு அந்நாட்டின் தலைவர்கள் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டியது அவசியம் ஆகும் எனத் தெரிவித்தார்.

---

## சங்கம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவ மனையின் தாதிகள் பயிற்சிப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற புனரமைப்புக் கூட்டத்தில் மேற்படி சங்கத்துக்கு புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் புதிய அங்கத்தவர்களை இச் சங்கத்தில் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் இச்சங்கம் ஈடுபட்டுள்ளது.

## தென்னம் நாற்று

யாழ் குடாநாட்டில் தென்னைச்செய்கையை அபிவிருத்தி செய்யும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தென்னம் நாற்றுகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

---

## தியாகி திலீபனுக்கு 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



"தேசவிடுதலைக்காய் நீமூட்டிய தீதனில்
சகல ஒடுக்குமுறைகளும் இல்லாதொழியட்டும்"

- பல்கலைக் கழக
ஊழியர் சங்கம்

(9514)

# தியாக தீபத்தின்
# 7-ம் ஆண்டு நிறைவு நாள்



## லெப். கேணல் திலீபன்

### (இராசையா பார்த்தீபன், ஊரெழு)

போர் முகத்தில் தேரெடுத்து புலியெனவே நீ நடந்தாய்
புன்னகையில் பூத்தெமது கண்ணெதிரே நீ கிடந்தாய்
பாரதத்துப் பாவிகளின் பசிக்குணவாய் நீ விழுந்தாய்
பார்த்தவிழி பூத்திருந்தோம் பார்த்தீபனே! நீ முடிந்தாய்.

**மருந்து பால்மா வகைகள்**
(தனியார்) வரைவுள்ளது
484, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

**மருந்து பால்மா வகைகள்**
(தனியார்) வரைவுள்ளது
பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

**மருந்து பால்மா வகைகள்**
(தனியார்) வரைவுள்ளது
பிரதான வீதி,
சித்தன்கேணி.

**மருந்து பால்மா வகைகள்**
(தனியார்) வரைவுள்ளது
ஊறணி,
வல்வெட்டித்துறை.

(கி/10393)

# 7-வது ஆண்டு நினைவாக....

தாயின் மடியில்
1963-11-29

தாயக மண்ணில்
1987 09-26



## லெப். கேணல் திலீபன்


### (இராசையா பார்த்தீபன் -ஊரெழு)

"எமது எதிர்கால சந்ததி வாழ
நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம்
இல்லாவிட்டால் எங்களைப்போல்தான்
நாளை எமது எதிர்கால சந்ததியும்
துன்பப்படும், வருத்தப்படும்."

\- திலீபன்

## வில்லியம் காவே தனியார் மருத்துவமனை

17, கண்டி வீதி, கண்டிக்குழி. (சி-10392)





# பன்னிரு நாட்களில் படைத்த காவியம் குன்றென நிமிர்ந்த தியாகத் திலீபம்

) (

சத்திய யுத்தம் நடத்திய
புத்திரனே! இம் மண்ணின் தவக் கொழுந்தே!
எத்தனை இடர்கள் எதிர்வந்த போதும்
சித்தம் குலையா உறுதியின் சின்னமே!
நித்தமும் உன் நினைவில்
மொத்த மக்களும் முழுகித் திளைக்க-
யுத்த முனைகளில் வெற்றி முழங்க-

எத்தனை ஆண்டுகள் ஓடிப் போனாலும்
இத்தரை மீதில் என்றும் நிலைக்கும். (- உன்நாமம்

வித்தைகள் பல புரிந்து வீரம் காட்டி
பூத்த புன்னகையால் உள்ளம் கவர்ந்து
சொத்தாம் மக்களை சேர்த்து அணைத்துமே
யுத்தம் நடத்திய திலீபன் நினைவில்
திளைப்போம் வருக.

## வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்

பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10407)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# உயிரினும் மேலானது

# எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்

### சிந்தனைக்கு..

ஏதாவதொரு வகையில் தியாகம் செய்யாமல், மெய்யானது எதையும் என்றாவது பெற்றதுண்டா?

-ஸர் ஆர்த்தர் ஹெலிப்ஸ்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்-05

## தமிழ் இனத்தின் விடி வெள்ளி

தியாகி திலீபன் தமிழீழ மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் சாகும் வரை உண்ணா நோன்பிருந்து மரணித்து, இன்றுடன் ஏழு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. தமிழீழ வரலாற்றுடன் பிணைந்துவிட்ட லெப். கேணல் திலீபன் புரிந்த தியாகமானது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல உலகில் விடுதலை வேண்டிப் போராடும் இனங்கள் யாவற்றிற்கும் ஒரு முன்னுதாரணமாகும்.

தியாகி திலீபன் தன் மரணத்தின் மூலம் வல்லாதிக்க சக்திகள் எத்துணை கொடுமையானவை என்பதை உலகிற்கு உணர்த்தினான். தமது விரிவாக்கத்தை மட்டுமே நோக்கமாக கொண்ட இவ் வல்லாதிக்க சக்திகள் தாம் கடந்து வந்த பாதையையோ அன்றி தமது வரலாற்றுப் பக்கங்களையோ புரட்டிப்பார்க்கப் போவதில்லை என்பதையும் உலகிற்குப் புரிய வைத்தான்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புக்கள் உயர்வானவை சிந்தனைக்கும் அப்பாற்பட்டவை. அதேவேளை பல பரிமாணங்களையும் கொண்டவை. இந்த வகையில் அவை சாத்வீகப் போராட்டத்தின் உச்சவடிவத்தில் இருந்து, ஆயுதப் போராட்டத்தின் உயர் நிலை வரை விரிந்து பரந்துள்ளன. இவ் அர்ப்பணிப்புகளின்/தியாகத்தின் வடிவங்களும் வேறானவை. ஆனால் இவை அனைத்தும் இறுதியில் உயர் அர்ப்பணிப்புகளுடன் கூடிய மகத்தானவை.

இந்த வகையில் சாத்வீகப் போராட்டத்தின் உச்சகட்டத்தை தொட்டு விட்ட தியாகி திலீபன் ஒரு தெளிவான அரசியல் பாடத்தை தமிழ் மக்களுக்குப் புரிய வைத்தான். இந்திய வல்லாதிக்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விட தன்னாலான காரியம் எதையும் செய்வதற்கு தயாராக உள்ளது என்பதே அதுவாகும். இதன் மூலம், இந்தியா மீது படர் கொண்டிருந்தமாயையை தியாகி திலீபன் உடைத்தான்- யதார்த்தம் இதுவே எனப்புரிய வைத்தான்.

தியாகி திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் எவையும் இந்திய-சிறிலங்கா சமாதான உடன்பாட்டிற்கோ, அன்றி இந்திய அரசால் நிறைவேற்றப்படமுடியாத சிக்கல் நிறைந்த கோரிக்கைகளோ அல்ல. இந்திய அரசால் நிறைவேற்றக் கூடிய, ஒப்பந்தத்திற்கு உட்பட்ட கோரி

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களை புரிந்து இருக்கிறது. வீர காவியங்களை படைத்து இருக்கிறது. அர்ப்பணிப்புகளை செய்திருக்கிறது இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள் ஆனால் எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலி கொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழ தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டை தலை குனிய வைத்த நிகழ்ச்சி உலகத்தின் மனச்சாட்சியை சீண்டி விட்ட நிகழ்ச்சி.

தான் அவன் செய்திருக்கிறான்?

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை எமது சுதந்திரம்; எமது கௌரவம்;

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது எனக்கு அளவு கடந்த பாசம் உண்டு. அவன் துடி துடித்துச் செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆத்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக் கட்டமான திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால்


> தியாகி திலீபன் மீளாத்துயில் அடைந்ததையிட்டு தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அப்போது வெளியிட்ட அறிக்கை தமிழீழ மக்களுக்கு பல விடயங்களைத் தெளிவு படுத்தியது. மக்களைப் போராட்டத்திற்கு அணி திரள வைக்கும் அறைகூவலாக விளங்கியது. லெப். கேணல் திலீபனின் ஏழாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவ் அறிக்கை இங்கு மீளப் பிரசுரமாகிறது.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக- மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது. திலீபன் உங்களுக்காக இறந்தான். உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்பிற்காக- உங்கள் சுதந்திரத்திற்காக -உங்கள் கௌரவத்திற்காக - இறந்தான். தான் நேசித்த மக்களுக்காக - தான்

சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலைதெரிவித்து இருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்தியத் தூதுவர் கூறியிருக்கிறார், தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பி இருப்பார் என்று சொல்லி இருக்கிறார். ஆனால் உண்மையில் நடந்ததுஎன்ன? நடந்து கொண்டிருப்பது

எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும். தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாயகப் பூமியில் தம்மைத் தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப் படும்.



இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம். எமது மக்களினதும், மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்கு பொறுப்பளித்தோம்.

இதனை அடுத்து என்ன நடைபெற்றதுஎன்பதெல்லாம் எமது மக்களாகிய உங்களுக்குத் தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்த கிராமங்களுக்கு செல்ல முடியாது முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க, சிங்கள குடியேற்றம் துரிதகதியில் தமிழ் மண்ணைகபளீகரம்செய்தது. சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது. அவசர அவசரமாக சிங்கள இனவாத அரச யந்திரம் தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப் படையின் அனுசரணையுடன் சிங்கள அரச ஆதிக்கம் தமிழீழத்தில் நிலை கொள்ள முயன்றது.

இந்தப்பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஏற்ற ஒரு முற்றுப்புள்ளி காண திடசந்தர்ப்பம் கொண்டான். சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தம் இல்லை பாரதம் தான் எமது இனப்பிரச்சினை

எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்தது. ஆகவே பாரத அரசிடம் தான் நாம் உரிமைகோரிப்போராட வேண்டும், எனவே தான் பாரதத்துடன் தர்ம யுத்தம்

ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான்.

நீராகாரம் கூட அருந்தாது மரண நோன்பை திலீபன் தழுவிக் கொள்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரே நாம் இந்திய தூதுவர் திரு. டிக்சிட்டுக்கு முன்னறிவித்தல் கொடுத்தோம். உண்ணாவிரதம் ஆரம்பமாகிஎட்டு நாட்கள் வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலுக்கு இந்திய அரசு ஆதிக்கத்தின் கீழுள்ள தொடர்பு சாதனங்கள், குறிப்பாக அகில இந்திய வானொலி எம்மீது விசமத்தனமான பொய்ப் பிரசாரத்தைக்கட்டவிழ்த்து விட்டது. திலீபனின் உண்ணா விரதத்தை மிகவும் கேவலமாக கொச்சைப் படுத்தியது. ஒன்பதாவது நாள் இந்தியத் தூதுவர் இங்கு வந்தார். உருப்படியில்லாத உறுதிமொழிகளைத் தந்தார்.

வெறும் உறுதி மொழிகளை நம்பி எமது இனம் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது. உருப்படியான திட்டங்களை முன் வையுங்கள். எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள். அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்பட மாட்டாது என்றேன். உங்களுக்கு திலீபனின் உயிரில் அக்கறை இருந்தால்

கிறோம் என்றேன். அதற்கு இந்திய தூதுவர் மறுத்து விட்டார்.

எனது அன்பான மக்களே!

இந்திய அரசு எமது நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து காலம் தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் திலீபன் உயிர் பிழைத்து இருப்பான் இன்னமும் இந்திய அரசு எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தி வருகிறது நாம் கேட்டுக் கொண்டபடி ஒரு இடைக்கால அரசை நிறுவி இன்று எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் சிரத்தை காட்டுவதை விடுத்து எமக்கு நிபந்தனைகளை விதிக்கிறது. எம்மோடு கலந்து ஆலோசிக்காத ஒரு ஒப்பந்தத்திற்கு எமது அங்கீகாரம் கேட்கிறது இப்போது ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றி பேசுகிறது போராட்டத்தை கைவிடச் சொல்கிறது.

நாம் உருப்படியான செயல்முறை திட்டங்களைக் கேட்க இந்தியா உறுதி மொழிகளை தருகிறது. நாம் விளக்கங்களைக் கேட்க இந்தியா கால அவகாசம் கேட்கிறது. நாம் கோரிக்கைகளை முன்வைக்க இந்தியா நிபந்தனைகளைப் போடுகிறது. இந்த சூழ்நிலையில் நாம் போராட்டத்தைக் கைவிட முடியாது. மாறாக போராட்டத்தை தீவிரப் படுத்த வேண்டும். தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட தேசிய எழுச்சியாக எமது போராட்டம் புரட்சி வடிவம் பெற வேண்டும்.

முல்லைத்தீவு, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் விடுதலைப் புலி வீரர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். வடக்கு -கிழக்கு அடங்கிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் புலிகள் முன்னெடுக்கும் இந்த சாத்வீகப் போராட்டத்தில் அணி திரள வேண்டும். மக்களின் ஒன்றுதிரண்ட சக்தி மூலமே, மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமைகளைவென்றெடுக்கலாம்.

நிறைவேற்றக் கூடிய, ஒப்பந்தத்திற்கு உட்பட்ட கோரிக்கைகளே ஆகும். இதனை இன்று இந்தியாவின் முன்னாள் சிறிலங்காவிற்கான தூதுவர் டிக்சிற் அளித்திருக்கும் ஒப்புதல் வாக்கு மூலமே, புரியவைக்கப் போதுமானதாகும். அவர் அண்மையில் சிறிலங்கா அரசு ஒப்பந்தத்தை அமுல் படுத்தாமையே பின்னர் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்க காரணம் என்றார்.

ஆனால் இந்தியா அன்று அதை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கவில்லை. இந்தியாவின் நிலைப்பாடு தமிழ் மக்கள் தமது உரிமைக்காக எந்த வகையிலும் போராட அனுமதிக்க முடியாது என்ற ரீதியிலேயே இருந்தது. இதற்குச் சாத்வீகப் போராட்டமும் விதிவிலக்காகக் கருதப்படவில்லை. ஒரு சின்னஞ்சிறிய இனம் இப்பிராந்தியத்தின் வல்லரசுக்கு எதிராக எவ்வாறு போராட முடியும் என்ற கேள்வியே அதன் சிந்தனையில் மேலோங்கி இருந்தது.

மறுவளமாக தியாகி திலீபனின் சாத்வீகப் போராட்டம், தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஆயுதப் போராட்டத்தின் முக்கியத்துவத்தையும்/ அவசியத்தையும் உணர்த்தியது என்றே கூறலாம். தியாகி திலீபன் சாத்வீகப் போராட்டத்தின் உச்சத்தைத் தொட்டு விட்ட வேளையிலும், வல்லாதிக்க சக்தியானது அப் போராட்டத்திற்கு மதிப்பளிக்காத [நிலையே] இம் முடிவுக்குச் சாரணமாகியது எனலாம்.

ஆனால் தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்த வேளை இந்தியா தனது கோரிக்கையை நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எதையும் கொண்டிருக்கவில்லை. இந்தியா தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்கின்றது. இதனைத் தமிழ் இனமும் உலகமும் புரிந்து கொள்வதோடு இதன் மூலம் ஆயிரமாயிரம் இளைஞர்களும் யுவதிகளும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் தமிழீழம் வென்றெடுக்கப்பட வேண்டுமென்ற சிந்தனையை மட்டுமே கொண்டிருந்தான்.

இந்த வகையில் தியாகி திலீபனைச் சாகடித்தது போன்று அவன் விதைத்த சிந்தனையை இந்திய அரசால் முறியடிக்க முடியவில்லை. ஆயிரக்கணக்கில் விடுதலைப் போரில் ஆண்களும் பெண்களும் இணைவதைத் தடுத்து நிறுத்தவோ, இறுதியில் தோல்வியுடன் தமிழீழ மண்ணை விட்டு இந்தியா வெளியேற வேண்டி வந்த அவமானத்தையோ அதனால் தடுக்க முடியவில்லை, அதன் பின்னரும் கூட அதன் விருப்பத்தையும் சிறிலங்கா பேரினவாதத்தின் எதிர்ப்பையும் மீறி தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்ச்சி காண்பதையும், அதை முறியடிக்க மேற்கொள்ளும் முயற்சிகள் தோல்வியைத் தழுவுவதையும் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர அதனால் எதுவும் செய்து விட முடியவில்லை. அந்தளவிற்கு தியாகி திலீபன் ஊட்டிய உணர்வு தமிழ்மக்கள் மத்தியில் வியாப்பித்து நிலைத்துள்ளது.

நேசித்த மக்களுக்காக - தான் நேசித்த மண்ணுக்காக - ஒருவன் எத்தகைய உயர்ந்த-உன்னதமான தியாகத்தை செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்

நடந்து கொண்டிருப்பது என்ன? என்பதைமக்கள் அறிந்து கொள்ள வேண்டும்

எமது உரிமைகள் வழங்கப்படும். எமது மக்களுக்கும்.

தான் எமது இனப்பிரச்சினையில் தலையிட்டது. பாரதம் தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதம் அளித்தது. ஆகவே பாரதம் தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது

உயிரில் அக்கறை இருந்தால் நீங்கள். அவனை வந்து பாருங்கள் எமது மக்களுக்கு முன்பாக அவனிடம் உறுதி மொழிகளைக் கூறுங்கள். நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறு

திலீபனின் இணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இது தான்.

## இமயமலை தலைகுனிய, இந்துசமுத்திரம் மௌனமாக, விடுதலைக்கு அதிகவிலை கொடுத்த வீரன்

· புதுவை இரத்தினதுரை

நேற்றுப் போல் அந்த நாட்கள்
காலக்காற்று அழிக்காத கோலமாக
நெஞ்சிலே அவன்.
அதன் பிறகும்
நல்லூரின் வடக்கு வீதியில்
ஆறுமுறை தேரசைந்து சென்றுளது.
எத்தனை ஆயிரம் பாதங்கள் படுவதும்; அழிவதுமாக:
ஏழு வருடங்கள் இறந்து விட்டன.
கோடை வந்தது.
மாரி பொழிந்தது.
குளிர்காலம் வந்து ஊசி குத்திப் போனது.
காலத்தின் கால்களுக்குத்தான் எத்தனை வேகம்.
என்றாலும் எங்கள் நெஞ்சிலே.........
அவனிருந்த இடத்தில் அவனே இருக்கிறான்
அவனின் பாதச் சுவடுகள்
இன்னும் உருக்குலையாமலே உள்ளன.
உலகத்தின் உச்சி முகட்டில்
ஊரெழுவின் பெயரை எழுதுவோம்.
இங்கேதான்
கருப்பையொன்று நெருப்பைச் சுமந்து
பத்துமாதத்தில் பெற்றெடுத்தது.
''ஆனந்தபவன்'' அரச குடும்பத்துக்கு
தவறுவிடுவதே பெருமைபோலும்
ஆதிக்கத்துக்கு கால்கள் முளைத்து.
வேலிதாண்ட விருப்புக் கொண்டது.
''பூமாலை'' போட்டபோதே திலீபன் சொன்னான்.
இது ''வேள்விக்கிடாய்''க்குப் போட்ட
''வெள்ளைமாலை'' என்று
வரலாற்றுவரிகள் பொய்க்கவில்லை.
சேதணை தாண்டி வானரங்கள் வந்து
வேலியோரமெல்லாம் ''ஒண்டுக்கு'' இருந்தபோது
தான்

உண்மை தெரிந்தது.
அடுப்பிலேற்றிய பானையை இறக்கி
வேகாத அரிசியில் விருந்து வைத்தபோது
திலீபன் தீயானான்.
காந்தி ஆட்டுப்பால் குடித்த படிதான்
உண்ணாவிரத உடுப்புப் போட்டார்.
திலீபன் உமிழ்நீரையும் உள்ளே விடாமல்
பட்டினிப் போர் தொடுத்தான்
பன்னிரண்டு நாட்களின் பின்
கண்மலர்கள் வாடிய போது
இமயமலை தலை குனிந்து கொண்டது.

இந்துசமுத்திரம் தொட்டுப் பார்த்து விட்டு
மௌனமாகி வாய் பொத்திக் கொண்டது.
இன்றும் இந்தியப் பேய்களின்
கடைவாயில் வழிந்த பச்சைக்குருதியின் நெடி
மூக்கில் அடிக்கடிவந்து முத்தமிடுகிறது.
நேற்றுப்போல் அந்த நாட்கள்
காலக்காற்று அழிக்காத கோலமாக
நெஞ்சிலே.........அவன்

## வேறு யாருக்குமல்ல!

மீசாலையூர் கமலா

வெண்ணெய் திரண்டு வர,
தாழியை உடைக்க வந்தவர்க்கு,
பசி, தாகம், உறுதியென்று...,
அகிம்சையில் அமர்ந்து
வேடங்கள் குலைய வைத்து
திலீபன்! மண்ணிலே,
சாகாத சரித்திர மாகிவிட்டாய்.
வந்தவரும் வந்த வழியே!
விண்ணில் வதிகின்றாயா?
இங்கே பார்!
''தமிழ் ...... ஈழம்'' என்று
உலகமே உச்சரிப்பதை!
உன் தலைவன் அடித்தடித்தே,
தியாகமும் வீரமும் சாதனை மலையில்!
அதனால் ...... நேசக் கரங்களும்
நீண்டு கொண்டிருக்கின்றன.
தியாக தெய்வமே!
தேசமே! ஆராதிப்பது,
வேறு யாருக்கு மல்ல.
''தமிழ்...... ஈழம்''!
உலகத்தவரால் நிரந்தரமாய்
உச்சரிக்கப்பட, ஆசீர்வதித்திடு.

## கப்பல் கட்டணம் நீக்க கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை அனுப்புவதற்கான கப்பல் கட்டணத்தை நீக்குமாறு, நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பொன்றில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிடம், யாழ் அரச அதிபர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-09-26**
**திங்கள் இரவு**

08.01- தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டுநினைவாக சிறப்பு நிகழ்ச்சி தமிழீழன் எழுதிய ''தகர்ந்த கோட்டையில் தவழ்ந்த புலிக்கொடி''
08. 20- செய்திச்சரம்
08. 30- செய்திகள்
08. 40- தரிசனம் - மூத்த வயலின் வாத்தியக்கலைஞர் செல்வி பாக்கியலட்சுமி நடராசா அவர்களுடனான செவ்வி

**1994. 09. 27**
**செவ்வாய் காலை**

07. 02- மாவீரவணக்கம்
07. 15- இன்றையதாரகை
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07.40- தாயகப்பாடல்கள்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

# ஹெலி வட்டமிட்ட சிறிது நேரத்தில் ஷெல் அருகில் வீழ்ந்து வெடித்தது

## காயமடைந்தவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''காலையில் ஹெலி வந்து வட்ட மிட்டு சிறிது நேரத்தில் முதலாவது ஷெல் வந்து எமது வீட்டிற்கு பின்புறமாகவுள்ள வீட்டில் வீழ்ந்து வெடித்தது இதில் நானும் எனது தம்பியும் படுகாயமடைந்து இரத்தம் பெருக்கெடுத்தோட செய்வதறியாது தவித்தோம்''

இவ்வாறு நேற்றுக் காலை பலாலி இராணுவ முகாமில் இருந்து அச்சுவேலிப் பகுதி மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்த நாராயணமூர்த்தி பிறேமா நமது நிருபருக்கு சம்பவம் பற்றி விபரிக்கையில் தெரிவித்தார்.

அவர் மேலும் விபரிக்கையில் ஹெலி நோட்டமிட ஊர்ச்சனங்கள் எல்லோரும் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று கொண்டிருந்தனர் இறுதியாக நாங்கள் மட்டுமே எஞ்சியிருந்தோம் அந்தச் சமயமே ஷெல் தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

இதில் எங்களின் வீட்டிற்கு பின்புறமாக உள்ள வீட்டிலேயே முதலாவது ஷெல் வந்து வீழ்ந்து வெடித்தது இதில் நானும் எனது தம்பியும் படுகாயமடைந்தோம் தொடர்ந்து ஷெல்கள் ஏனைய பகுதிகளிலும் வந்து வீழ்ந்து வெடித்தன.

இது இவ்வாறு இருக்க இராணுவத்தினரின் துப்பாக்கி ரவைகள் எமது பகுதிகளுக்குள் கூவிக் கொண்டு வந்து வீழ்ந்தன உடனே இராணுவத்தினர் எம்மைநோக்கிச் சுட்டவாறு வருவதை அறிந்த நாங்கள் ஒருவாறாக பாதுகாப்பான இடம் ஒன்றிற்கு தப்பித்துச் சென்றோம் அங்கு எமக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதனை அடுத்து அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டோம் என தெரிவித்தார். (பா, தி)

## இரண்டு இந்து ஆலயங்கள் தாக்குதலினால் சேதம்

வலிவடக்குப் பகுதிகள் மீது சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலினால் இரண்டு இந்து ஆலயங்கள் சேதமடைந்துள்ளன.

ஆவரங்கால் பகுதியில் அமைந்துள்ள ஆவரங்கால் சிவன் கோவில், மற்றும் பத்தமேனிப் பகுதியில் அமைந்துள்ள நாகதம்பிரான் கோவில் என்பனவே சேதமடைந்தவை ஆகும்

இவ் ஆலயங்களின் சேத விபரங்கள் உடனடியாக மதிப்பிடமுடியவில்லை எனினும் குறிப்பிடக்கூடிய அளவு சேதம் ஏற்பட்டுள்ளது. (பா, தி, நி, 88)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு செஞ்சிலுவை உணவு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த பொதுமக்களுக்கு செஞ்சிலுவை சங்கம் உடனடியான உணவு விநியோகம் மேற்கொண்டது.

நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையினால் தமது இருப்பிடங்களைவிட்டுவெளியேறிய பொதுமக்களுக்கு உடனடியான உணவாக பாண் வழங்கப்பட்டது.

இடம்பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் கோவில் தேவாலயங்கள் மற்றும் வீதியில் இரு பகுதியில் இருந்த பல நாற்றுக் கணக்கான மக்களுக்கு இது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கரவெட்டி பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நெல்லியடி கரவெட்டி நோக்கி பலத்த ஆட்லறி ஷெல்கள் அடுத்தடுத்து ஏவப்பட்டன,

நேற்றுகாலை 10 00 மணியளவில் பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் கரவெட்டி கன்பொல்ல பகுதியில் விழுந்தன. விழுந்த இரண்டு ஷெல்கள் வெடிக்காத நிலையில் நிலத்தில் புதைந்துள்ளது

மேலும் நாவலர் மடம் பகுதியில் விழுந்த ஷெல் ஒன்றுக்கு கால்நடைகள் சில இறந்தன கரவெட்டியில் மொத்தமாக ஐந்துக்கு மேற்பட்ட ஷெல்கள் விழுந்தன. (யோ)

## வடமராட்சி கிழக்கில்

அம்பாறை - மட்டு எல்லையில்

# புலிகளின் தாக்குதலில் விசேட அதிரடிப்படை பலி

(மட்டக்களப்பு)

அம்பாறை - மட்டக்களப்பு எல்லையில் திக்கோடை எனும் இடத்தில் புலிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவர்பலியானார் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பதுளை ஒலு கடமைச் சேர்ந்த கே ஏ குணசுந்தர என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார். இம்மோதல் சம்பவம் கடந்த செவ்வாய் இரவு இடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தனா

# 36 மணி நேரம் ஓரிடத்தில் தரித்தது பற்றி விசாரணை

புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தனா போர் கப்பல் மூழ்கடிக்க பட்ட கடற்பகுதியில் தொடர்ச்சியாக 36 மணி நேரம் நங்கூரமிடப்பட்டு நிலையாக ஓரிடத்தில் நின்றது பற்றி விசாரணை நடத்த கடற்படையின் உயர் மட்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது

மேற்படி குழு கப்பல் குறிப்பிட்ட கால எல்லைக்கப்பால் தரித்து நின்றதற்கான காரணம் பற்றி தீவிரமாக ஆராயும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாகரவர்த்தனா மூழ்கடிப்பு

# பாதுகாப்பு அமைச்சிற்கும் தாக்குதலில் பொறுப்புண்டு

## கடற்படை அதிகாரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கற்பிட்டி கடற்பரப்பில் கடற்படைக் கப்பல் தாக்கப்பட்டதற்கு பாதுகாப்பு அமைச்சே பொறுப்பேற்க வேண்டும் என கடற்படை அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த 19-ம் திகதி இரவு கற்பிட்டி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படைக்கு சொந்தமான 'சாகரவர்த்தனா' போர்க்கப்பல் விடுதலைப் புலிகளின் கடற்கரும்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது தெரிந்ததே.

இக் கப்பல் தாக்கப்பட்டது குறித்து கடற்படை அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில் கப்பல் பயணம் செய்யும் பாதையில் மீனவர்கள் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது என கடற்படையினர் ஏற்கனவே சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிற்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் தமது கோரிக்கையை உதாசீனம் செய்த பாதுகாப்பு அமைச்சு அப் பகுதியில் மீன் பிடிப்பதை அனுமதித்தது. அவர்கள் மக்கள் மீன்பிடிக்க முடியாவிட்டால் வாழ்க்கை நடத்த முடியாது என காரணம் கூறினர்.

சம்பவ தினத்தன்று விடுதலைப் புலிகள் மீன் பிடிகாரரைப் போல் நடந்தே தாக்குதலை நடாத்தினர் எனவே மேற்படி கப்பல் தாக்கப்பட்டதில் பாதுகாப்பு அமைச்சிற்கும் பொறுப்பு உண்டு என கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கடல்வழி மூலம் தரையிறங்கும் பயிற்சி சிறிலங்காவிற்கு பிரிட்டன் வழங்கும்?

(கொழும்பு)

சிறிலங்கா படையினருக்கு கடல்வழி மூலமாக தரையிறங்கி தாக்குதல் நடத்துவதற்கான பயிற்சியை வழங்குவது தொடர்பாக பிரிட்டனின் உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டனின் ரோயல் மரைன்சை சேர்ந்த நான்கு பேர் கொண்ட குழு ஒன்று ஒரு வாரமாக கொழும்பில் தங்கியிருந்துவிட்டு இவ்வாரம் பிரிட்டன் திரும்பியுள்ளதாக அப் பத்திரிகை கூறுகிறது. இவ் விஜயம் குறித்து பிரிட்டிஷ் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் கருத்து எதுவும் கூற மறுத்துவிட்டனர்.

சிறிலங்கா படையினருக்கு கடல் வழி மூலமான தாக்குதலுக்கு பயிற்சி வழங்குவது தொடர்பாக இக்குழுவினர் பேச்சுகள் நடத்தவே கொழும்பு வந்ததாக கூறப்படுகிறது.

தாக்குதலில்

# வளலாய்பகுதி மோதலில் 4 புலிகள் வீரச்சாவு



2-ம் லெப்டினன்ட் செல்லக்குட்டி



வீரவேங்கை குபேந்திரன்



வீரவேங்கை இலக்கியன்



வீரவேங்கை சொக்கன்

25-09 94 நேற்றுக்காலை வளலாய், கதிரிப்பாய் ஆகிய இடங்களினூடாக முன்னேறிய இராணுவத்தினருடன் ஏற்பட்ட உக்கிர மோதலில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

# அரசாங்க தரப்புக் குழு அடுத்தவாரம் யாழ். வரும்

## சண்டே லீடர் தகவல்

(கொழும்பு)

பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகளுடன் நடத்தவென நியமிக்கப்பட்ட அரச தரப்பு நால்வர் குழு அடுத்த வாரம் யாழ். புறப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேசமயம் விடுதலைப்புலிகளினால் யுத்த நிறுத்தம் உத்தியோகப்பற்றற்ற பேச்சு நடத்தியதாகவும் தெரியவந்துள்ளது'

## பெருமளவு

தமேனி, அச்சுவேலி, தம்பாலை, கதிரிப்பாய், ஆவரங்கால் ஆகிய பகுதிகளில் இருந்தே இடம்பெயர்ந்துள்ள

## வடமராட்சி கிழக்கில்
## மீனவர் மீது தாக்குதல்

வடமராட்சி கிழக்கு கடற்பிராந்தியத்தில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் தொடர்ச்சியாக பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இடையிடையே கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 7.00 மணியளவில் நடந்தது.

இக்கடற்பரப்பில் 'டோறா' படகில் ரோந்து சென்ற கடற்படையினரே பலத்த தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலையடுத்து மீனவர்கள் தமது மீன்பிடி பொருள்களை கடலில் கைவிட்ட நிலையில் கடலில் குதித்து கரை வந்து சேர்ந்தனர். (யோ)

---

# இன்று 26.09.94 தாவடியில்
# பட்டிமன்றம்
(பாடலில்)

**"எவர் பாடலில் தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்கிறது?"**

| கவிஞர்: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | கவிஞர்: கவியரசு கண்ணதாசன் |
| --- | --- |
| கனக. நாகேஸ்வரன் எம் ஏ | எம்.எஸ் தயாளன் பி,ஏ. |
| செ. இலகுநாதன் | எஸ் கணேசலிங்கம் அதிபர் |
| பசு.ஸ்ரீபதி. நாடக ஆசிரியர் | வாமன் ஆசிரியர் |
| செ. சத்தியமூர்த்தி பி எஸ்சி. | பொன் மதிமுகராஜா ஜே பி |

**நடுவர்: பொன் கணேசமூர்த்தி**

பட்டிமன்ற அமைப்பு:

பொன். மதிமுகராஜா ஜே.பி.
எம். ஜி. ஆர் இல்லம், தாவடி.

தாவடி அருள்மிகு ஸ்ரீகாளி அம்பாள் தேவஸ்தானம் தாவடி தெற்கு - கொக்குவில் கும்பா அபிஷேக தினத்தை முன்னிட்டு சங்கா அபிஷேகம் காலை 9.00 மணிக்கு - அன்னதானம் பகல் 12.00 மணிக்கு.

தாவடி தெற்கு. - தேவஸ்தானம்
26.09.94 (சி/10413)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி; 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்' பணிமனையில் 1994ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

### தியாகி திலீபன்

முன்றலிலும் இன்று காலை 7.00 மணிக்கு உண்ணாவிரத நிகழ்வுகள் இடம் பெறும். மாலை 5-00 மணியளவில் நினைவுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

இதேசமயம், நேற்று 11 ஆம் நாள் கோட்டரீதியாக நடைபெற்ற சிரமதானங்களிலும் உண்ணாவிரத நிகழ்வுகளிலும் பலர் திரளாகக் கலந்து கொண்டனர்.

தியாகி திலீபனின் உருவப் படத்திக்கு மலர் சொரிந்து அஞ்சலி செலுத்தினர் (தி)

### எறிகணை

னங்கள் ஆவரங்கால் பகுதியிலும் தரித்துநின்றன. இராணுவ நடவடிக்கைகள் ஒய்வடைந்ததும் போக்குவரத்து சீரடைந்தது (யோ)

### அம்புலன்ஸ்

சேதம்எதுவும்ஏற்படவில்லை.

நேற்று பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் அச்சுவேலி பத்தமேனி பகுதிகளில் மேற்கொண்ட எறிகணை மற்றும் விமான தாக்குதல்களினால் காயமடைந்தவர்களை ஏற்றி வந்த செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ் வண்டியை உலங்கு வானூர்தியொன்று ஆவரங்கால் சந்தியில் இருந்து சுமார் ஐந்நூறுயார் வரை துரத்தி துரத்தி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இதேவேளை வல்லைவெளி முதல் நீர்வேலி வரை பாதையில் சென்ற வாகனங்களை உலங்கு வானூர்தி துரத்திச் சுட்டதால் காயமடைந்தோரை எடுத்துச் செல்லும் பணி சிரமத்தின் மத்தியிலேயே இடம் பெற்றது, (நி)

### அரசாங்க

ருக்கும் 25 வீத நியமனங்கள் சிறுபான்மையினருக்கும் ஒதுக்கப்படும் என்றார்,

---

தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் கருத்து எதுவும்

### எறிகணை, ஹெலி

லும் அச்சுவேலி பத்தமேனி பகுதிகளில் மட்டும் நான்கு பேர் பலியாகியுள்ளனர் பதினாறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேசமயம் இப்பகுதியில் உலங்கு வானூர்தியிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன-

போர் விமானங்கள் சில இராணுவம் முன்னேறி வரும் இடங்களைச் சுற்றி வட்டமிட்டுகுண்டுத்தாக்குதலை மேற்கொண்டன-

இதே வேளை சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதலுக்கு அஞ்சி இடம் பெயர்ந்து வந்து ஆவரங்கால் சிவன் கோவிலில் தஞ்சமடைந்தவர்கள் மீது உலங்குவானூர்தியிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் இருவர் பலியானார்கள் பத்துக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் இவ்வேளை இவ் ஆலயத்தில் ஐந்நூறுக்கு மேற்பட்டோர் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது-

இத் தாக்குதல் பல நிமிடங்கள் வரை நீடித்தது இதில் காயமடைந்தவர்கள் யாழ்: போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்-

### நான்கு புலிகள்

(செல்லத்துரை செல்வரூபன், திருவீதி அம்பாள் அகம் உரும்பிராய் வடக்கு -சொந்த இடம் கொட்டியாபதிதை)

★ வீரவேங்கை சொக்கன் (ஜெயராஜா சுஜேந்திர குமார், தபாற்கந்தோரடி மானிப்பாய்- சொந்த இடம் சுழிபுரம்)

இந் நான்கு போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

### தாக்குதலில்

சுப்பிரமணியம் தனஞ்செயன் (07), பொன்னம்பலம் இராசம்மா (52), கிருஷ்ணன் பரமேஸ்வரி (54), வைகுந்தநாதன் வைதேகி (17), செல்லத்துரை உமாராணி (23), மகாலிங்கம் பவளராணி (30), அழகையா சிவபாக்கியம் (47), தேவராசா தமிழினி (12), அப்பையா பரிமளம் (40), இரத்தினம் வெற்றிவேல் (22), இரத்தினம் கலைச்செல்வி (15), கிருஷ்ணன் சிறிதரன் (09), நமசிவாயம் நவமணி (65)

இதேவேளை நேற்றுக் காலை பரவலாக நடைபெற்ற எறிகணை மற்றும் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் நான்கு பேர் பலியானார்கள். இருபது பேர் காயமடைந்தனர்,

இச்சம்பவங்களில் பலியானவர்கள் விபரம்:

கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜா(34)பத்தமேனி, இவரின் மகள் கிருஷ்ணராஜா, கெங்காதேவி (05) இராசையா பாலசரஸ்வதி (54), சிதம்பரப்பிள்ளை செல்லாச்சி (87) அச்சுவேலி காளிகோவிலடி.

காயமடைந்தவர்கள் விபரம்: எம். யோகேஸ்வரன் (16), சச்சிதானந்தம், ஏ. நந்தகுமார் (16), நாராயணமூர்த்தி பிறேமா, (22)நாகேஸ்வரி, கே. புஸ்பரட்ணம், கா. கணேசன் (16), செல்வக்குமார் (55), தி. தங்கச்சியம்மா (40) இவரது மகள்மார், கி. சரோஜா (14), சி, பத்தினிகுமாரி (16), கோவிந்து (42), இராசலிங்கம் மனோரஞ்சிதம் (34), தர்மராசா தாட்சாயினி (12) றொபேட் சந்திரலதா (20), ஆழ்வார் சின்னத்துரை (52),

மற்றும் சிலர் சிறு காயங்களுக்குள்ளானார்கள். இவர்கள் அனைவரும் அச்சுவேலி பத்தமேனி, பகுதிகளைச் சேர்ந்தவர்கள். (தி), (பா), (நி, 88)

---

களினால் யுத்த நிறுத்தம் பற்றி முன்வைக்கப்பட்ட கோரிக்கை அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையெனவும், நிபந்தனை அற்ற போர் நிறுத்தம் பற்றி படையினரின் முடிவுக்காக எதிர்பார்த்து இருப்பதாகவும் சண்டே லீடர் மேலும் கூறுகிறது.

விடுதலைப் புலிகளின் கடிதத்திற்கு பதிலளிக்கும் முகமாக பிரதமர் சந்திரிகா தனது அமைச்சரவையுடன்

இருந்தே இடம்பெயர்துள்ளனர்- இவர்கள் ஆவரங்கால் மற்றும் பகுதிகளிலும் அமைந்துள்ள ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

எனினும் தாக்குதல்கள் தணிய இடம்பெயர்ந்த மக்கள் அவரவர் பகுதிகளுக்கு திரும்பிக்கொண்டிருப்பதாக நேற்று மாலை இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன- (பா, தி, நி, 88, சி)

---

# மரண அறிவித்தல்
## திருமதி ஆழ்வாப்பிள்ளை பர்வதம்

திருமதி ஆழ்வாப்பிள்ளை பர்வதம் காலமாகி விட்டார். இவர் காலம்சென்ற திரு. ஆழ்வாப்பிள்ளை (நாதன் சூபலஸ் கிளிநொச்சி உரிமையாளர்) யின் அன்பு மனைவியும், இலங்கைநாதன், இராமநாதன், பரமநாதன், திருமதி பரஞ்சோதி சௌந்தரேஸ்வரி, ஜெயரத்தினம் இராஜேஸ்வரி, இராசதுரை ஜீவரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயரத்தினம் (மக்கள் வங்கி காங்கேசன்துறை), இராசதுரை (ராஜீ சூபலஸ் பருத்தித்துறை), இலங்கைநாதன் சாந்தாதேவி, இராமநாதன் புவனேஸ்வரி, பரமநாதன் தேவிகா ஆகியோரின் மாமியாரும், ஜோதிஸ்வரன் ஆசிரியர், நித்தியஜோதி, கஸ்தூரி. கவிதா, பரந்தாமன், ராஜராஜன், ஜெயதர்சினி, அஜந்தா, ராஜாஜீ, கஜமுகன், கஜனியா, ஜெகன்நாத், இளவரசன், பவித்ரா, ஆராதனன் ஆகியோரின் பேர்த்தியாரும், நிதர்சனின் பூட்டியாரும் ஆவார் மரணச் சடங்கு நாளை 2.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:

**இராஜன் ஜெயரட்ணம்**
[மக்கள் வங்கி காங்கேசன்துறை]

**கந்தவனம் இராசதுரை**
[ராஜீ சூபலஸ் பருத்தித்துறை]

(9517)